COMMISSIONER OF RURAL DEVELOPMENT AND PANCHAYAT RAJ
23 NOV 2022
CHENNAI - 600 015.

<u>சுருக்கம்</u>

பணியமைப்பு – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – 2022–23ம் ஆண்டு ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் தற்காலிக தேர்ந்தோர் பட்டியல் வெளியிடப்பட்டது – ஊரக வளர்ச்சி இணை இயக்குநர் நிலை அலுவலர்களுக்கு கூடுதல் இயக்குநர்களாக தற்காலிக பதவி உயர்வு மற்றும் பணி நியமனம் மற்றும் கூடுதல் இயக்குநர் நிலை அலுவலர்களுக்கு பணியிட மாறுதல் மற்றும் பணிநியமனம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1) துறை**

**அரசாணை (வா) எண்.500** | **நாள்: 22.11.2022**
சுபகிருது, கார்த்திகை 06,
திருவள்ளுவர் ஆண்டு 2053

<u>படிக்கப்பட்டவை:</u>

1. அரசாணை(4ப) எண்.51, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(இ1) துறை, நாள் 17.11.2022
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடிதம் எண்.37911/ 2019/ஜி.இ.1.1, நாள் 18.11.2022.

-----

<u>ஆணை:</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2022–23ம் ஆண்டு ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் தற்காலிக தேர்ந்தோர் பெயர்ப் பட்டியலுக்கு ஒப்புதல் அளித்து அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. அதனைத் தொடர்ந்து 2022–23ம் ஆண்டு ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் தற்காலிக தேர்ந்தோர் பட்டியலில் இடம்பெற்ற 6 ஊரக வளர்ச்சி இணை இயக்குநர்களுக்கு ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர்களாக தற்காலிகப் பதவி உயர்வு மற்றும் பணி நியமனம் மற்றும் ஊரக வளர்ச்சி கூடுதல் இயக்குநர் நிலையில் உள்ள 4 அலுவலர்களுக்கு நிர்வாக காரணங்கள் முன்னிட்டு, பணியிட மாறுதல் மற்றும் பணி நியமனம் ஆகியவை பின்வருமாறு வழங்கி அரசு ஆணையிடுகிறது:–

| வ எண். | பெயர் மற்றும் பதவி | பதவி உயர்வில் வழங்கப்படும் பணியிடம் |
|---|---|---|
| 1 | திரு.பி.மந்திராச்சலம்,<br>முன்னாள் இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கரூர் மாவட்டம்.<br>(கட்டாயக் காத்திருப்பில் உள்ளவர்) | கூடுதல் இயக்குநர்/கூடுதல் தலைமைச் செயல் அலுவலர் (திறன்மேம்பாடு), தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.<br>(திருமதி.சி.சுஜாதாஜேக்கப் என்பவர் மாறுதல் பணியிடம்) |

| | | |
|---|---|---|
| 2 | திரு.க.அருண்மணி,<br>இணை இயக்குநர் (PRI),<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15 | கூடுதல் இயக்குநர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15.<br><br>(கூடுதல் இயக்குநர் பணியிடத்தில், இணை இயக்குநர் திரு.க.அருண்மணி பணிபுரிந்த பணியிடம்) |
| 3 | திரு.ஆர்.சங்கர்,<br>முன்னாள் இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விழுப்புரம் மாவட்டம்.<br><br>(கட்டாயக் காத்திருப்பில் உள்ளவர்) | கூடுதல் இயக்குநர் / தலைமைச் செயல் அலுவலர் (DDU–GKY), தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.<br><br>(திரு.பி.செல்வராஜ் என்பவர் மாறுதல் பணியிடம்) |
| 4 | திருமதி.எஸ்.தெய்வநாயகி,<br>முன்னாள் இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருவாரூர் மாவட்டம்.<br><br>(கட்டாயக் காத்திருப்பில் உள்ளவர்) | கூடுதல் இயக்குநர் / இயக்குநர்,<br>மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், மறைமலை நகர்,<br>செங்கல்பட்டு மாவட்டம்.<br><br>(திரு.எஸ்.சாமுவேல் இன்பதுரை என்பவர் மாறுதல் பணியிடம்) |
| 5 | திரு.வி.பிச்சை,<br>முன்னாள் இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.<br><br>(கட்டாயக் காத்திருப்பில் உள்ளவர்) | கூடுதல் இயக்குநர்/ திட்ட இயக்குநர் (CRRT),<br>Chennai River Restoration Trust,<br>சென்னை –28.<br><br>(அரசாணை (நிலை) எண்.77, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்:27.05.2022ன்படி புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடம்) |
| 6 | திரு.கே.வரதராஜன்,<br>இணை இயக்குநர்,<br>சமூகத் தணிக்கை சங்கம் (தெற்குமண்டலம்), (இ) பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை–15. | கூடுதல் இயக்குநர் / முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்), தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம், சென்னை–106.<br><br>(திரு.கி.அ.சுப்பிரமணியம் என்பவர் பணியிடத்தில்) |
| 7 | திருமதி.சி.சுஜாதா ஜேக்கப்<br>கூடுதல் இயக்குநர் /கூடுதல் தலைமைச் செயல் அலுவலர் (திறன்மேம்பாடு), தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34. | கூடுதல் இயக்குநர் / சிறப்பு அலுவலர் (உள்ளாட்சி அமைப்புகள்),<br>தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அலுவலகம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சென்னை–2.<br><br>(காலிப்பணியிடம்) |

| | | |
|---|---|---|
| 8 | திரு.பி.செல்வராஜ்,<br>கூடுதல் இயக்குநர்/தலைமைச் செயல் அலுவலர் (DDU-GKY),<br>தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்,<br>சென்னை-34. | கூடுதல் இயக்குநர் / முதன்மை தலைமை சமூக வளர்ச்சி அலுவலர்,<br>தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், சென்னை.<br><br>(காலிப்பணியிடம்) |
| 9 | திரு.எஸ்.சாமுவேல்இன்பதுரை,<br>கூடுதல் இயக்குநர் / இயக்குநர் ,<br>மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்,<br>மறைமலை நகர்,<br>செங்கல்பட்டு மாவட்டம். | கூடுதல் இயக்குநர் (கணிப்பாய்வு),<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,<br>சென்னை-15.<br><br>(திருமதி.க.சுமதி, கூடுதல் இயக்குநர் கவனித்து வந்த பணியிடம்) |
| 10 | திரு.பெ.ஆனந்தராஜ்,<br>கூடுதல் இயக்குநர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை-15. | கூடுதல்இயக்குநர் (ஜல் ஜீவன் மிஷன்),<br>மாநில திட்ட மேலாண்மை அலகு (SPMU)<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம்,<br>சென்னை-15.<br><br>(அரசாணை (நிலை) எண்.131, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (WS1) துறை, நாள்: 26.09.2022-ன்படி புதியதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடம்) |

3. மேலே பத்தி 2-ல் கூடுதல் இயக்குநராகப் பதவி உயர்வு பெறும் இணை இயக்குநர்களை அவர்களது பணியிடத்திலிருந்து விடுவிக்கப்படும் முன்பாக அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் அல்லது தண்டனைகள் ஏதுமில்லை என்பதை உறுதி செய்து கொண்ட பின்னர் அவர்களை பணியிலிருந்து விடுவிக்குமாறு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

4. அரசாணை (நிலை) எண்.249, நிதித்(வ.செ.பொ-1) துறை, நாள் 21.05.2020-ன்படி மேற்காண் பணியிடமாற்றம் செய்யப்பட்ட அலுவலர்கள் யாரும் இந்த பணியிட மாறுதலுக்கு பயணப்படி கோரக் கூடாது என்ற நிபந்தனையுடன் இவ்வரசாணை வெளியிடப்படுகிறது.

5. பணி நியமனம் வழங்கப்பட்ட அலுவலர்கள் பதில் நபரை எதிர்பார்க்காமல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு புதிய பணியில் உடனடியாக சேர அறிவுறுத்தப்படவேண்டுமென சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

6. மேலே பத்தி இரண்டில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் பணியில் சேர்ந்த தேதி குறித்த விவரத்தினை அரசுக்குத் தெரிவிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ. அமுதா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
சம்பந்தப்பட்ட அலுவலர்கள்,
<u>வழி</u>– ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை–15.
கூடுதல் தலைமைச் செயலாளர் / பொது தலைமை இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி(பயிற்சி) (முழு கூடுதல் பொறுப்பு), சென்னை–15.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் சென்னை–15.
மேலோண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.
திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், சென்னை–34.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம், சென்னை–106.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம், (Slum clearance Board) சென்னை–5.
இயக்குநர், தமிழ்நாடு சமூகத் தணிக்கைச் சங்கம்(SASTA), சென்னை–15.
சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்
மாநில கணக்காயர், சென்னை–5/18/35.

<u>நகல்</u>
மாண்புமிகு அமைச்சர்(ஊரக வளர்ச்சி) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/அந2/உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

மு.தேவகி
பிரிவு அலுவலர்

மேற்குறிப்பாணை எண்.37911/2019/ஜி.இ.1.1 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை–15
நாள்: 23.11.2022.

அரசாணை (வா) எண். 500, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ1) துறை, நாள். 22.11.2022 சார்வு செய்யப்படுகிறது.

ஆணையருக்காக 23/11/2022

பெறுநர்:

சம்மந்தப்பட்ட அலுவலர்கள்
(வழி :– சம்மந்தப்பட்ட துறைத் தலைவர் / மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக)

நகல்:

1. அரசு கூடுதல் தலைமைச் செயலர்,
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–09.
2. அரசு முதன்மைச் செயலர்,
தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்,
சேப்பாக்கம், சென்னை.
3. அரசு முதன்மைச் செயலர்,
சென்னை நதிகள் மறுசீரமைப்பு அறக்கட்டளை (CRRT),
6/103, தினகரன் சாலை, ராஜா அண்ணாமலைபுரம், சென்னை–28.
4. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
அண்ணாசாலை, சென்னை.
5. திட்ட இயக்குநர் (ஜெ.ஜெ.எம்)/ மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், சேப்பாக்கம், சென்னை.
6. மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.
7. செயலாளர்,
தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்,
அரும்பாக்கம், சென்னை–106.
8. மாவட்ட ஆட்சித்தலைவர்,
விழுப்புரம், கரூர், திருவாரூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள்
9. இயக்குநர்,
மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம்,
மறைமலை நகர், செங்கல்பட்டு மாவட்டம்.
10. இயக்குநர்
தமிழ்நாடு சமூக தணிக்கை சங்கம் (SASTA),
பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை–15.
11. திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
விழுப்புரம், கரூர், திருவாரூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்கள்.
12. இருப்பு கோப்பு